4. தகவல் கோரல்.

அவைக்குள்ளே தலைக்கவசம் கொண்டுவர அனுமதிக்காதது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, பெரியவருக்காகச் சிறிது விதிவிலக்கு அளிக்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, நான் இங்கே வரும்பொழுது 'ஹெல்மெட்' கொண்டு வந்தேன். அதை உள்ளே அனுமதிக்கவில்லை. எங்கே போனது, யார் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த 'ஹெல் மெட்டை' பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னிடத்தில் பத்திரமாக இருக்கிறது.

5. அறிவிப்புகள்.

(அ) ஓர் உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நம்முடைய மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சினை தொடர்பாக நான் ஏற்கனவே அனுமதி அளித் திருந்தேன். இன்று நமது அவையில் ஏற்பட்ட நல்ல, இனிய சூழ்நிலை காரணமாக, அவர்கள் அதை அடுத்து எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துவிட்ட காரணத்தால், இப்போது முறையான நம்முடைய அடுத்த அலுவலுக்குப் போகிறோம்.

(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1987 ஆளுநரால் திருப்பியனுப்பப்பெற்றுள்ளது குறித்த செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. எட்டாவது சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1987), ஆளுநர் அவர்களால் இப் பேரவைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. இம்மாதிரியான சட்டம் தேவை தானா என்று இந்தப் பேரவை மீண்டும் பரி சீலிக்கலாம் என்று ஆளுநர் செய்தி அனுப்பியுள்ளார். ஆளுநர் அவர்களிடமிருந்து வந்த செய்தியும், எட்டாவது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவும், அச்சிடப் பெற்று உறுப்பினர்களின் தகவலுக்காக அவையில் இன்று வைக்கப் பெற்றுள்ளன. ஆளுநர் அவர்களின் செய்தி அவையில் படிக்கப் பெற்றதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவைக் குறிப்பில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.